இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 322 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 19 – வெள்ளிக்கிழமை 03 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 322 : Thiruvalluvar Year - 2057 - Aani 19 - Friday 03 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் கிழக்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த காங்கயம் நகரச் செயலாளர் ஏ.வெங்கடேஷ்வரன், பொதுக்குழு உறுப்பினர் ப.ராசேந்திரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் தலைமையில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இணையதள அமைப்பாளர் கபிலன் கணேசமூர்த்தி கழகத்தில் இணைந்தார்.

## ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த

# ம.தி.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

**சென்னை, ஜூலை 3-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் தலைமையில் முன்னாள் மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (02.07.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்டம், ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் அவர்கள், தலைமையில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் பி.வி.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இணையதள அமைப்பாளர் கபிலன் கணேசமூர்த்தி, மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் எஸ்.நல்லசிவம்,

மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முன்னாள் செயலாளர் வி.பி. ஈஸ்வரமூர்த்தி, முன்னாள் அவைத் தலைவர் எஸ்.லோகநாதன், முன்னாள் பொருளாளர் டி.சிவசுப்பிரமணி, கொடுமுடி ஒன்றிய முன்னாள் செயலாளர் பி.துரைசாமி, கொடுமுடி பேரூர் முன்னாள் செயலாளர் டி.பாலசுப்பிரமணியம், மாவட்ட தொண்டர் அணி முன்னாள் அமைப்பாளர் வி.பி.பழனிவேல் ராஜ்,

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர்கள் கே. ஜெயபிரகாஷ், த.வினோத் குமார், ஈரோடு மாநகர் மாவட்ட பொருளாளர் குணசேகரன், ஈரோடு மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கதிர்வேல், கழக வெளியீட்டு அணி மாநில துணைச் செயலாளர் நாகராஜ், ஈரோடு மாநகர் வீரமணி ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஈரோடு தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் மு.கோபால் தலைமையில் முன்னாள் மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் மு.பெ. சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்!**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் கிழக்கு மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த காங்கயம் நகரச் செயலாளர் ஏ.வெங்கடேஷ்வரன், பொதுக்குழு உறுப்பினர் ப.ராசேந்திரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (02.07.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கயம் நகரச் செயலாளர் ஏ.வெங்கடேஷ்வரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் ப.ராசேந்திரன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## 108-ஐ 120 ஆக மாற்ற குதிரைபேர அரசியல் நடத்தும் த.வெ.க.!

# ஒன்றிய அரசு விசாரணை நடத்தவேண்டும்!

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி வலியுறுத்தல்!

**புதுக்கோட்டை, ஜூலை 3-**

**108-ஐ 120 ஆக மாற்ற குதிரைபேரம் நடத்தும் த.வெ.க. குறித்து ஒன்றிய அரசு விசாரணை நடத்த வேண்டும்” என்று முன்னாள் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**



குதிரை பேரத்தில் ஈடுபட்டிருந்தால், கூட்டணிக் கட்சிகளை ஆதரிக்க சொல்லியிருக்க மாட்டோம், என தி.மு.க. முன்னாள் அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

“இரண்டு ம.தி.மு.க. உறுப்பினர்களையும் ராஜினாமா செய்யச் சொல்லுங்கள்; அவர்களை நான் வெற்றி பெறச் செய்கிறேன் என விஜய் சொன்னார் என அந்த கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ வெளிப்படையாக சொல்லி இருக்கிறார். அந்தப் பக்கம் குதிரை பேரம், யானை பேரம் என எல்லாம் நடந்திருக்கிறது என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு. ஆனால் இந்த குதிரை பேரத்துக்கு லஞ்ச ஒழிப்புத்துறையோ, காவல்துறையோ எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை.

**செந்தில் பாலாஜியை கைது செய்ய முயற்சி!**

விஜய் கரூருக்கு செல்வதற்கு முன்பு செந்தில்பாலாஜியை கைது செய்ய முயற்சி செய்கிறார்கள். த.வெ.க. அட்சிக்கு வந்த பிறகு குதிரை பேர அரசியல் நடக்கிறது. 4 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைகிறார்கள். 108 என்பதை 120 ஆக மாற்ற வேண்டும் என்ற இலக்கோடு, குதிரை பேர அரசியலில் ஈடுபட்டுள்ளனர். ஒன்றிய அரசு இது குறித்து விசாரிக்க வேண்டும். திமுக எப்போதுமே குதிரை பேரத்துக்கு எதிரானதுதான். ஜனநாயகத்தை நாங்கள் நம்புகிறோம்.

அ.தி.மு.க.வோடு சேர்ந்து கூட்டணி அமைக்கும் எண்ணம் ஒரு சிறு துளி கூட மு.க.ஸ்டாலினுக்கு கிடையாது. குதிரை பேரத்தில் ஈடுபட்டிருந்தால், கூட்டணிக் கட்சிகளை ஆதரிக்க சொல்லியிருக்க மாட்டோம். குதிரை பேர அரசியலுக்கு எடுத்துக்காட்டு, ஒவ்வொரு எம்.எல்.ஏ.வும் த.வெ.க.வுக்கு தாவுவதுதான்; குளம் வற்றிப் போனால் பறவைகள் அடுத்த குளத்தை தேடிச் செல்வது வழக்கம்.

**ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம்!**

முதல்வருக்கு வெற்றியையும், தோல்வியையும் மாற்றி மாற்றி தருவார்கள். நாங்கள் ஐந்தாண்டுகளில் செய்த பாதி திட்டங்களை கூட, அவர்களால் செய்ய முடியாது. நிச்சயமாக நாங்கள் ஆட்சியை கவிழ்க்க மாட்டோம். தேர்தலை சந்தித்துதான் ஆட்சிக்கு வருவோம். மக்களை சந்திக்காமல் ஆட்சிக்கு வரவே மாட்டோம் கொல்லைப்புற வழியாக ஆட்சிக்கு வரும் எண்ணம் எங்களுக்கு துளியும் கிடையாது.

வைகோவுக்கு காட்டு கத்து மட்டும் தான் கத்த தெரியும். அவர் எங்கள் பெயரை சொல்லி லஞ்சம் வாங்கியிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை.

இன்றும் ஷூட்டிங் தான் நடக்கிறது. சட்டமன்றம் படப்பிடிப்பு நிலையம். அங்கு முதல்வர் விஜய் ஹீரோவாக நடிக்கிறார். அனைவரையும் நடிகர்களாக மாற்றிய பெருமை த.வெ.க. ஆட்சிக்கு உண்டு. அங்கு இயக்குநர் சபாநாயகர்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

---

## குட்கா கறைகளை நீக்கும் ‘வாஷிங்மெஷின்’!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவு!

சென்னை, ஜூலை 3-



கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், குட்கா கறைகளை நீக்கும் ‘வாஷிங்மெஷின்’ குறித்து சமூக வலைதளத்தில் கீழ்க்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

**வடக்கில் பா.ஜ.க. பயன்படுத்தி வந்ததைப் போன்ற ‘வாஷிங்மெஷின்’ ஒன்று, தற்போது தமிழ்நாட்டிற்கும் வந்துவிட்டது என்று கேள்விப்பட்டேன். இந்த புது தமிழ்நாடு மாடல் மெஷின் குட்கா கறைகளைக் கூட நீக்கும் என்று சொல்கிறார்களே... உண்மையா?**

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.